DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **S.T.C.No. 380/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சின்னகருப்பாயி** (Pw.2) |
| Father/Husband Name | : | **சித்திரைவேல்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day June of 2023

(1 வது எதிரி இறப்பு. 4 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் இல்லை. 2, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது வீரக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அசா1 எனது கணவர். முதன்முதலில் சின்ன பையன்கள் கல்லை கொண்டு எங்கள் வீட்டுதகரத்தில் எதிரி மாரியம்மாளின் மகன் ஆவார்கள். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி மாரியம்மாள் தகரத்தை எடு நீ என்று சொல்லி எனது இடம் இங்கு வரை இருக்கு என்று சொல்லி தரகத்தில் ஏறி மிதித்தார். இரண்டு செங்கற்களையும் என் மீது எடுத்து எறிவதற்காக கையில் வைத்திருந்தார். இந்த சம்பவம் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்தது தேதி மாதம் ஞாபகம் இல்லை. எதிரி ஜெகநாதன் எனது வீட்டிற்கு வந்து எனது கணவரை தள்ளிவிட்டுபாய்ந்து

அடித்தார். எதிரி ஜெகநாதனின் அம்மாசின்னகருப்பாயி கம்பைகொண்டு வந்து எனது கணவரின் முதுகில் அடித்தார். பின்னர் வாங்க ஊசி போடுவோம் என்று சொல்லி வயல்காடு பக்கம் சென்றபோது எதிரி மாரியம்மாள் போன் செய்து மூன்று பேரை வரச் சொன்னார். மூன்று பேரில் இரண்டு பேர் மாரியம்மாளின் அண்ணனும் தம்பியும் ஆவார்கள். ஒரு பையன் பெயர் பூவலிங்கம், ஒரு பையன் பெயர் ராமசந்திரன் என்று சொன்னார்கள். ஒரு பையன் அடிக்காமல் நின்று கொண்டு இருந்தார்கள். எனது கணவரை கம்பை வைத்து அடித்தார்கள். எனது கணவரும் கீழே விழுந்து விட்டார். அவரே கிழே விழுந்துவிட்டார் அவரை ஏன் அடிக்கிறீர்கள் என்று நான் சொன்னேன். உடனே எதிரிகள் அங்கிருந்து போய்விட்டனர். பின்னர் நரிக்குடி மருத்துவமனைக்கு சென்றோம். ஆனால் எதிரி ஜெகநாதன் நாங்கள் போவதற்கு முன்பாகவே அங்கு சென்று படுத்துக்கொண்டார். பின்னர் திருச்சுழிக்கு சென்றோம். அங்கும் எதிரி ஜெகநாதன் மருத்துவமனையில் படுத்துக்கொண்டார். பின்னர் மருத்துவமனையில் இருவரையும் தனிதனியே வைக்குமாறு நான் சொன்னவுடன் அங்கிருந்த நர்சுகள் தனிதனியே இருவரையும் வைத்தனர். போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி–

2. எதிரிகள் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **S.T.C.No. 380/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **சித்திரைவேல்** (Pw.1) |
| Father/Husband Name | : | **ராக்கப்பன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day June of 2023

( 1 வது எதிரி இறப்பு. 4 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் இல்லை. 2, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது வீரக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 27.04.2019 ம் தேதியன்று எனக்கு போன் காலையில் வந்தது. நான் அப்போது வீட்டில் இருந்தேன். வீரக்குடி முருகன் கோவில் பூசாரி வரசொல்லி நான் முருகன் கோவிலுக்கு சென்றேன். அங்கு அவர் ஒரு பித்தளை தட்டு அதில் ஒரு சின்ன சிலை திருநீறு வைத்து கொடுத்தார். அதை சிவகாசியை சேர்ந்த காளியப்பன் என்பவர் கொடுத்தாக கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு போய் வீட்டில் வைத்தேன். காலை 9 மணியளவில் எதிரி ஜெகநாதன் அவரது அம்மா சின்னகருப்பி, எதிரி ஜெகநாதன் மனைவி மாரியம்மாள் ஆகியோர் வந்து நின்று கொண்டுஇருந்த

என்னை கீழே தள்ளிவிட்டனர். பின்னர் சின்னகருப்பி கம்பை தூக்கி கொண்டு வந்து என்னை முதுகு பக்கம் அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை தகரத்தை பிறிக்க சொல்லி அடித்தார்கள். அந்த தகரம் சமையல் அறைக்கு காற்று வராமல் இருப்பதற்காக போட்டது.

2. பின்னர் எதிரிகள் சென்றுவிட்டனர். நரிக்குடி மருத்துவமனை செல்வதற்காக நானும்ள னது மனைவியும் சென்றோம். அப்போது எதிரி பூவலிங்கம், ராமசந்திரன், இன்னொரு நபர் வண்டியை ஓட்டி வந்தார். இறங்கி ஓடி வந்து ரோட்டில் ஏற போன என்னை இந்த போறாண்டா என்று சொல்லி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டு இடது காலில் உள்ள பெருவிரலுக்கு அடுத்த விரலில் உள்ள நகத்தை கத்தியை வைத்து அறுத்து சென்றுவிட்டனர். பின்னர் நரிக்குடிகாவல் நிலையம் நான் செல்வதற்குள் எதிரிகள் அங்கு சென்று என் மீது பொய் புகார் கொடுத்துள்ளனர். பின்னர் நான் காவல் நிலையம் சென்று பின்னர் நரிக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எதிரி ஜெகநாதன் படுத்திருந்ததால் நான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் திருச்சுழிஅரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கும் ஜெகநாதன் படுத்திருந்தார். நான் பெண்கள் மகபேறு வார்டில் நான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம்காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் கொடுத்தது ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. (**அந்த புகார் மனு அதசாஆ 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

2. எதிரிகள் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.